PRAYERS OF THE FAITHFUL (33rd Sunday in Ordinary Time – 15 Nov 2026)

My dear brothers and sisters, God has entrusted each of us with gifts and talents to be used for the good of others and the building up of his kingdom. Trusting in his generosity and mercy, let us bring our prayers before him.

Response: Lord, hear our prayer.

1. For the Holy Father, Pope Leo XIV, our bishops, priests and religious: May they faithfully use the gifts entrusted to them to proclaim the Gospel with courage, inspire others through their example, and lead God's people towards the joy of his kingdom. Let us pray to the Lord.

2. For all Christians: May we overcome the fear of failure, selfishness and indifference, recognise the gifts God has given us, and use them generously in the service of our families, communities and the Church. Let us pray to the Lord.

3. For those who feel that their gifts are small or insignificant, especially the elderly, the sick and those who are lonely: May they discover the value of their prayers, sacrifices and loving presence, and find joy in knowing that every act of love bears fruit in God's kingdom. Let us pray to the Lord.

4. For our parish community: May we become a community of joyful and generous disciples, encouraging one another to share our talents, serve those in need, and become instruments of Christ's love, hope and compassion in the world. Let us pray to the Lord.

5. For the sick and the deceased: May the sick receive healing, strength and comfort through God's loving presence, and may our deceased brothers and sisters, especially those who faithfully used their gifts in God's service, be welcomed into the eternal joy of their Master's kingdom. Let us pray to the Lord.

Heavenly Father, you have entrusted us with the precious gifts of your grace. Hear the prayers we offer today, free us from fear, and help us to serve you faithfully, so that one day we may share in the joy of your eternal kingdom. Through Christ our Lord. All: Amen.

FÜRBITTEN (33. Sonntag im Jahreskreis – 15. November 2026)

Liebe Schwestern und Brüder, Gott hat jedem von uns Gaben und Talente anvertraut, die wir zum Wohl unserer Mitmenschen und zum Aufbau seines Reiches einsetzen sollen. Im Vertrauen auf seine Güte und Barmherzigkeit bringen wir unsere Bitten vor ihn. **Antwort: Herr, erhöre unser Gebet.**

1. Für unseren Heiligen Vater, Papst Leo XIV., unsere Bischöfe, Priester und Ordensleute: Dass sie die ihnen anvertrauten Gaben treu einsetzen, das Evangelium mutig verkünden, durch ihr Leben Zeugnis geben und die Menschen zur Freude im Reich Gottes führen. – Wir bitten dich, erhöre uns.

2. Für alle Christen: Dass wir die Angst vor dem Scheitern, den Egoismus und die Gleichgültigkeit überwinden, die Gaben Gottes in unserem Leben erkennen und sie grosszügig in unseren Familien, Gemeinschaften und in der Kirche einsetzen. – Wir bitten dich, erhöre uns.

3. Für alle, die ihre Gaben für unbedeutend oder gering halten, besonders für ältere Menschen, Kranke und Einsame: Dass sie den Wert ihres Gebetes, ihrer Opfer und ihrer liebevollen Zuwendung erkennen und Freude darin finden, dass jede Tat der Liebe Frucht im Reich Gottes bringt. – Wir bitten dich, erhöre uns.

4. Für unsere Pfarrgemeinde: Dass wir eine Gemeinschaft froher und grossherziger Jüngerinnen und Jünger Christi werden, einander ermutigen, unsere Talente einzubringen, den Bedürftigen zu dienen und in der Welt zu Werkzeugen der Liebe, Hoffnung und Barmherzigkeit Christi zu werden. – Wir bitten dich, erhöre uns.

5. Für die Kranken und unsere Verstorbenen: Dass die Kranken durch Gottes liebevolle Gegenwart Heilung, Kraft und Trost erfahren und unsere verstorbenen Schwestern und Brüder, besonders jene, die ihre Gaben treu in den Dienst Gottes gestellt haben, in die ewige Freude ihres Herrn aufgenommen werden. – Wir bitten dich, erhöre uns.

Guter Vater, du hast uns die kostbaren Gaben deiner Gnade anvertraut. Erhöre unsere Bitten, befreie uns von aller Angst und hilf uns, dir treu zu dienen, damit wir eines Tages an der Freude deines ewigen Reiches teilhaben dürfen. Darum bitten wir durch Christus, unseren Herrn. Alle: Amen.

நம்பிக்கையாளர்களின் மன்றாட்டுகள்

பொதுக்காலம் 33ஆம் ஞாயிறு – 15 நவம்பர் 2026

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் பல்வேறு திறமைகளையும் கொடைகளையும் நம்பிக்கையுடன் ஒப்படைத்துள்ளார். அவற்றை நம் சகோதர சகோதரிகளின் நலனுக்காகவும், இறையாட்சியின் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்த அவர் நம்மை அழைக்கிறார். அவரது அளவற்ற அன்பிலும் இரக்கத்திலும் நம்பிக்கை கொண்டு, நமது மன்றாட்டுகளை அவரிடம் எழுப்புவோம்.

பதில்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1. திருத்தந்தை, திருத்தந்தை பதினான்காம் லியோ, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவியருக்காக: இறைவன் அவர்களிடம் ஒப்படைத்துள்ள அருள்கொடைகளையும் திறமைகளையும் உண்மையுடன் பயன்படுத்தி, துணிவோடு நற்செய்தியை அறிவிக்கவும், தங்கள் வாழ்வின் வழியாக முன்மாதிரியாகத் திகழவும், இறையாட்சியின் மகிழ்ச்சியை நோக்கி இறைமக்களை வழிநடத்தவும் வேண்டுமென்று இறைவனை மன்றாடுவோம்.

2. அனைத்து கிறிஸ்தவர்களுக்காக: தோல்வி குறித்த அச்சம், தன்னலம், பிறர் நலனில் அக்கறையின்மை ஆகியவற்றைக் களைந்து, இறைவன் நமக்கு அளித்துள்ள கொடைகளை உணர்ந்து, அவற்றை நம் குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் திருஅவையின் நலனுக்காகத் தாராள மனத்துடன் பயன்படுத்திட வேண்டுமென்று இறைவனை மன்றாடுவோம்.

3. தங்களுடைய திறமைகள் சிறியவை, பயனற்றவை என்று கருதுகின்ற அனைவருக்காகவும், குறிப்பாக முதியோர், நோயாளிகள் மற்றும் தனிமையில் வாழ்வோருக்காகவும்: தங்களுடைய செபம், தியாகம் மற்றும் அன்பான உடனிருப்பின் மதிப்பை உணர்ந்து, ஒவ்வொரு அன்புச் செயலுமே இறையாட்சியில் நற்பலன் தருகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்திட வேண்டுமென்று இறைவனை மன்றாடுவோம்.

4. நமது பங்குச் சமூகத்திற்காக: நாம் அனைவரும் மகிழ்ச்சியும் தாராள மனமும் கொண்ட கிறிஸ்தவச் சீடர்களாக வாழ்ந்து, ஒருவர் மற்றவரின் திறமைகளை ஊக்குவித்து, ஏழை எளியோருக்குப் பணியாற்றி, உலகில் கிறிஸ்துவின் அன்பு, நம்பிக்கை மற்றும் இரக்கத்தின் கருவிகளாகத் திகழ்ந்திட வேண்டுமென்று இறைவனை மன்றாடுவோம்.

5. நோயாளிகளுக்காகவும், இறந்த விசுவாசிகளுக்காகவும்:
நோயுற்றோர் இறைவனின் அன்பான உடனிருப்பால் நலமும் வலிமையும் ஆறுதலும் பெறவும், குறிப்பாக இறைவன் தங்களுக்கு அளித்த கொடைகளை அவரது பணிக்காக உண்மையுடன் பயன்படுத்திய நம் இறந்த சகோதர சகோதரிகள் அனைவரும், தங்கள் ஆண்டவரின் நிலைவாழ்வு மகிழ்ச்சியில் பங்குபெறவும் வேண்டுமென்று இறைவனை மன்றாடுவோம்.

அன்புத் தந்தையே, உமது அருளின் விலைமதிப்பற்ற கொடைகளை எங்களிடம் ஒப்படைத்துள்ளீர். நாங்கள் எழுப்பிய மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும். எங்கள் அச்சங்களிலிருந்து எங்களை விடுவித்து, உமக்கு உண்மையுடன் பணியாற்ற எங்களை வழிநடத்தும். ஒருநாள் உமது நிலையான விண்ணரசின் மகிழ்ச்சியில் நாங்களும் பங்குபெற அருள்புரியும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.